Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு | மக்கள் நாளிதழ்

Eezhanatham

உங்கள் வியாபாரம் சிறக்க ஈழநாதத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 06 | 23.10.2004 சனிக்கிழமை | ஓசை 148

## சுயவிருப்பில் இணையவந்த சிறுமி பெற்றோரிடம் ஒப்படைப்பு

(எம்.யுவராஜ்)

தனது சுயவிருப்பின் பெயரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைய வந்த வயது குறைந்த சிறுமியொருவர் தமது பெற்றோரிடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியைச் சேர்ந்த செல்வி சுப்பிரமணியம் - நந்தினி என்பவரே தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார்.

விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மகளிர் அரசியல் துறைப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## எம்.பிக்கு எதிராக விசா மோசடி

(நமது நிருபர்)

கனடாவிற்கு விசா பெற போலி ஆவணங்களை தயாரித்து சமர்ப்பித்ததாக குற்றம் சுமர்த்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டபி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சட்டவிரோத மின் பாவனைக்கு தமிழீழ காவல் துறை நடவடிக்கை

(எம்.யுவராஜ்)

அரசடித்தீவு பட்டிப்பளை போன்ற கிராமங்களில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்களின் மின்சார வயர்கள் நேற்று தமிழீழ காவல் துறையினரால் பறி முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தமிழீழ காவல் துறையின் அரசடித்தீவுப் பணிமனை எச்சரிக்கை செய்யப்பட்டது.

# முல்லைத்தீவில் காணாமல்போனோருக்கு சிறிலங்கா படையினரே முக்கிய காரணம்

## வவுனியா நீதவான் இளஞ்செழியன் மேல்முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை

(நமது நிருபர்)

**முல்லைத்தீவு பகுதியில் இராணுவம் நிலை கொண்டு இருந்த போது கைதாகி காணாமல் போயிருந்தவர் காணமல் போவதற்கு அப்போது அப்பகுதியில் நிலை கொண்டு இருந்த இராணுவமே காரணம் என்று வவுனியா மாவட்ட நீதி மன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதி மன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.**

1995 ஆண்டு 8 மாதம் 25 தனது சகோதரரான மரியதாஸ் அன்ரனிதாஸ் என்பவர் இராணுவத்தால் கைதாகி காணாமல் போனதாக இவரின் சகோதரி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆள் கொணர்வு மனு தாக்கல் செய்து இருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நியாதிக்கம் கொண்ட மாவட்டமாக வவுனியா இருப்பதன் காரணமாக இந்த வழக்கை வவுனியா மாவட்ட நீதி மன்றத்திற்கு மேன் முறையீட்டு நீதி மன்றம் மாற்றம் செய்து இருந்தது.

இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதி மன்றத்தில் மேற் கொள்ளப்பட்டு வந்தது. நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரிகள் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. எனினும் வழக்காளி தரப்பில் காணமல் போனவரின் சதோதரி ஆஜராகி இருந்தார். நீதவான் தனது பரிந்துரையினை நீதிமன்றில் வாசித்தார்.

கண்ணால் கண்ட இரண்டு சாட்சிகளின் படியும் நீதிமன்றில் அளிக்கப்பட்ட இரண்டு சாட்சியங்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பொலிஸ் அதிகாரியினால் வன்புணர்வுக்குள்ளான பதினான்கு வயது சிறுமிக்கு குழந்தை பிறந்தது

(நமது நிருபர்)

வவுனியா மாமடுவ பகுதியை சேர்ந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் 14 வயது சிறுமியை பாலியல் பலாக்காரம் புரிந்து அந்த சிறுமிக்கு குழந்தை பிறந்து இருப்பதாக வவுனியா நீதிமன்றில் வவுனியா சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி சிறுமியை செட்டிக்குளம் பிரதேசத்தில் இருந்து வீட்டு பணிக்காக அழைத்து சென்று தேனீருக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் பலாக்காரம் புரிந்ததாகவும் இவ்வாறு பலமுறை பலாக்காரம் புரியப்பட்டு பின்னர் இந்த சிறுமியை வீட்டில் சேர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்த சிறுமிக்கு குழந்தை ஒன்று பிறந்திருப்பதாக வவுனியா பொலிஸ் சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பிரிவு வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நபர் பொலிஸ் உத்தியோகத்தராக வவுனியாவில் கடமையாற்றி இருந்தார் என்பதும் தற்போது அவர் சேவையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு நீதிமன்றுக்கு கைதிகளை கொண்டுவருவதில் பாதுகாப்பு சிக்கல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து வெளி மாவட்ட சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ள சிறைக் கைதிகளை விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதில் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களை சிறைச்சாலை நிர்வாகம் எதிர் நோக்கியுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சேர்ந்த சச்சுமாஸ்டர் உட்பட இருவர சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து சில கைதிகள் பதுளை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை சிறைச்சாலைகளுக்கு பாதுகாப்பு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அமெரிக்க துணை ராஜாங்க அமைச்சர் விரைவில் கொழும்பு வருகை

(நமது நிருபர்)

அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் ஆமிரேச் ஸ்ரீலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தெற்காசியாவின் நான்கு நாடுகளுக்கான இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. அமெரிக்க

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிங்ஸ்லியின் மரணம் ஆட்கொலை எனத் தீர்ப்பு

(நமது நிருபர்)

இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் மரணம் கொலை என மட்டக்களப்பு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் மரண விசாரணை முடிவில் தீர்ப்பளித்துள்ளார்.

நேற்று மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் அன்னாரின் மரண விசாரணை நடைபெற்றது.

மனைவி சுகிர்தாதேவி இராசநாயகம் (வயது 60) சாட்சியமளிக்கையில்: சம்பவதினம் மாலை 4.00 மணியளவில் கள்ளியங்காட்டிலுள்ள காணியைப் பார்ப்பதற்கு எனது கணவர் மெய்க்காப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேமந்த திசாநாயக்க சகிதம் வீட்டிலிருந்து திறந்த காரில் புறப்பட்டு சென்றார்.

6.15 மணியளவில் நான் வீடு பெருக்கிக் கொண்டிருந்த சமயம் ஒருவர் ஓடிவந்து ''ஜயாவை யாரோ சுட்டு விட்டார்கள்'' என்றார்.

உடனே நான் அங்கு சென்றபோது காரின் சாரதி ஆசனத்தில், வலது பக்க காதோரம் சுடப்பட்ட நிலையில் எனது கணவர் இறந்து கிடந்தார். சுட்டவர்களை தெரி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிழக்கு மாகாண வீதிகள் புனரமைப்பு

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் வீதிகள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்கென நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆறுகோடி அறுபத்துரெண்டு இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடுசெய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மிக நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த பல வீதிகள் இந்நிதியின் மூலம் தற்போது சீரமைக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதில் நான்கு கோடி எண்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மன்னார் மதபோதகரினால் மூன்று பிள்ளைகளின் தாய் வன்புணர்வு

(நமது நிருபர்)

மன்னார் விடத்தல் தீவுப் பகுதியை சேர்ந்த கிறிஸ்தவ போதகர் ஒருவர் 3 பிள்ளைகளின் தாயார் ஒருவரை பாலியல் பலாக்காரம் புரிந்து இருப்பதாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த பெண் தனக்கு நடந்தவற்றை வவுனியா நீதிமன்றில் நீதவானுக்கு முன்னால் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருப்பதாகவும் விடத்தல் தீவுப் பகுதியில் மேற்படி பாதிரியாருக்கு கீழ் பணியாற்றி வந்தபோது தன்னை திருமணம் செய்வதாக கூறி தன்னை பாலியல் பலாத்காரம் புரிந்ததாகவும் தற்போது தான் இரண்டு மாத கற்பிணியாக இருப்பதாகவும் அந்த பெண் நீதவானுக்கு தெரிவித்துள்ளார். இந்த வழக்கு 01.12.2004 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### இன்றைய நாளில்

### தகவற்துளி

தமிழீழத்தில் நிகழும் போரினால் பெற்றோரை இழந்த பெண்பிள்ளைகளை தமிழீழத்தில் நிர்மாணிகளாக உருவாக்கும் செஞ்சோலை சிறுவர் இல்லம் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பணிப்பின் பெயரில் ஆரம்பமான நாள்.
(23-10-1991)

# செய்தித் துளிகள்

## மக்கள் விசனம்

(சசி)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுலை இலுப்படிச்சேனை, பாவற்கொடிச்சேனை, பருத்திச்சேனை, கரையாக்கன்தீவு போன்ற கிராமங்களிலுள்ள பல பாதைகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக அவ்வூர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மிக நீண்ட காலமாக சீரழிந்த நிலையில் காணப்படும் இப்பாதையின் சீர்கேட்டால் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் எனப் பலர் பல்வேறுபட்ட சிரமங்களை தினமும் எதிர்கொண்டு வருகின்றனர். இந்தச் சமாதான காலத்திலாவது இக்கிராமங்களில் உரிய அதிகாரிகளின் கவனம் திரும்பாதா எனவும் பொது மக்கள் கேட்கின்றனர்.

## இடமாற்றம்

(நமது நிருபர்)

புதுக்குடியிருப்பு கைவேலியில் இயங்கி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலக மக்கள் தொடர்பகம் நேற்று முன்தினம் முதல் உடையார் கட்டு வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்திற்கு முன்பாக இயங்குகின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## வெள்ளைப் பிரம்பு தினம்

(நமது நிருபர்)

கல்முனையில் இன்று வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப்படுகின்றது.

கல்முனை நகர லயன்ஸ்கழகம் மட்டக்களப்பு விழிப்புலனற்றோர் தரிசனம் என்பனவற்றுடன் இணைந்து இவ் வெள்ளைப் பிரம்பு தினம் நடைபெறுகின்றன.

இதனை முன்னிட்டு கல்முனை இராமக்கிருஷ்ண மிசன் வித்தியாலயத்திலிருந்து கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை வரை கல்முனை நகரூடாக மாபெரும் ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது. அத்துடன் கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது.

## மகா சங்காபிஷேகம்

(நமது நிருபர்)

வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தின மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 27ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

இதனையடுத்து மகேஸ்வர பூசை, அலங்கார பூசை, அன்னதானம் என்பனவற்றுடன் அன்றிரவு விசேட வசந்த மண்டபப் பூசையுடன் பெருமான் வீதியுலா வருதல் என்பன இடம்பெறும்.

## கணனிக் கூடம் திறப்பு

(நமது நிருபர்)

தமிழ், முஸ்லிம் விவசாயிகளின் நலன் கருதி அண்மையில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் விவசாயத் தொழில்நுட்பக்கணனிக் கூடமொன்று நிந்தவூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலய விவசாய உத்தியோகத்தர் எம்.ஆதம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் விவசாய விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் ஜி.ஏ.எம்.எல். எமித்தியகொட நாடாவை வெட்டி இதனைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் விவசாய திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் தின விழா

(நமது நிருபர்)

வந்தாறுமூலை கணேசா வித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர் தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் சி.பத்தினியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்களால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் சில ஆசிரியர்களின் சேவையினைப் பாராட்டி பரிசில்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

# அரசியல் புள்ளிகளின் விவகாரம் அம்பலமாகி விடும் என்பதாலேயே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## -கூட்டமைப்பு எம்.பி. ஈழவேந்தன் கருத்து.-

(நமது நிருபர்)

**இந்திய அரசியலில் இருக்கும் பெரும் புள்ளிகளினதும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களாக இருப்பவர்களினதும் குட்டுகள் அம்பலமாகிவிடும் என்ற காரணத் தினாலேயே சந்தன மரக்கடத்தல் வீரப்பன் விசாரணைகளின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டார். வீரப்பனால் வெட்டப்பட்ட சந்தன மரங்கள் இப்போதும் அரசியல்வாதிகளின் வீடுகளில் மேசை, கதிரை, கட்டில்களாகவும், அலங்காரப் பொருள்களாகவும் உருமாறியிருக்கின்றன.**



உயிருடன் பிடித்தால் இந்தத் தொடர்புகளும், உண்மைகளும் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினாலேயே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார். இது ஒரு சதிச் செயல்.

-இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தன். முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவின் மறைவுக்கான அனுதாபப் பிரேரணைமீது நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே ஈழவேந்தன் எம்.பி. இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் அ[illegible]து மேலும் கூறியதாவது:-

அமரர் காமினி பொன்சேகா மனிதாபிமானம் நிறைந்தவர். அனைத்து இன மக்களுடனும் அன்பாகப் பழகியவர். தவறுசெய்வது இயற்கை, ஆனால், அதை மன்னிப்பது பெருந்தன்மை. இன்று காமினி பொன்சேகா உயிருடன் இருந்தால், வீரப்பனின் படுகொலையைக் கண்டித்திருப்பார் என்பதும் உறுதி.

வீரப்பன் பல்வேறு கொலைகளைச் செய்தவர்தான்; அதை நான் மறுக்கவில்லை. வீரப்பனை இப்படி ஒரு தீவிரவாதியாக மாற்றியது யார்? வீரப்பனைக் கைக்கூலியாக வைத்துக் கொண்டதில் அரசியல்வாதிகளும், பெரும்புள்ளிகளும்தான் நன்மை அடைந்தனர். இந்த விடயத்தில் காலத்திற்குக் காலம் காவல்துறை உட்பட பலதரப்பட்ட அரசியல் வாதிகளின் ஆதரவு வீரப்பனுக்கு இருந்தே வந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழ் நாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல் வாதிக்கும் இல்லாத துணிச்சல் வீரப்பனுக்கு இருந்தது. கொலையாளியாகத் திரிந்த வீரப்பன், கடைசிக் காலத்தில் திருந்தி நல்லமுறையில் வாழ்க்கை நடத்தியவர். காவிரி நீர் தமிழகத்திற்கு வேண்டும் என்றார். கர்னாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்ட போது அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். வீரப்பன் தனக்காக எதையும் கேட்கவில்லை. பயங்கரக் கொலைகாரியாகவும், கொள்ளைக்காரியாகவும் இருந்த பூலான்தேவிக்கு மன்னிப்பு வழங்க முடிந்தது என்றால், ஏன் வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்க மறுத்தனர்? வீரப்பனைச் சுட்டுக்கொன்ற அதிரடிப்படை வீரர்களுக்கு தேசிய விருதும், சம்பள உயர்வும், சன்மானங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வீரப்பனைத் தேடுகிறோம் என்று கூறிக் கொண்டு அப்பாவிகளான எத்தனை மலைவாழ் கிராமத்தவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர் பொலிஸார்? கணக்கிட முடியாத இளம் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். எத்தனை குடும்பப் பெண்களைச் சித்திரவதை செய்துள்ளனர்? இவையெல்லாம் அதிரடிப்படையினர் செய்த சட்டபூர்வமான செயல் என்று இந்திய அரசு அங்கீ கரிக்கின்றதா? இச் செயல்களுக்காகத்தான் தமிழக அரசு இந்த அதிரடிப்படையினரைக் கௌரவிக்கின்றதா? என்றும் ஈழவேந்தன் கேள்வியெழுப்பினார். தமிழ்நாட்டுப் பொலிஸ் இன்று சர்வதேச மட்டத்தில் பாராட்டப்படுகின்றது. அவர்களால் வீரப்பனை உயிருடன் பிடித்திருக்க முடியும். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை என்றார்.

# புலிகளின் அரசியல் குழு ஞாயிறன்று திரும்புகிறது

(நமது நிருபர்)

மேற்கு நாடுகளில் மூன்றுவார காலமாகச் சுற்றுப்பயணம் செய்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர் நாளை ஞாயிற்றுக்கிழமை சுவிட்ஸர்லாந்திலிருந்து கொழும்பு புறப்படுவார்கள் எனத் தெரிகின்றது. கடந்த வியாழக்கிழமை நோர்வேயில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு சுவீடனின் தலைநகர் ஸ்டொக்ஹோம் சென்ற புலிகளின் குழுவினர், நேற்று ஜேர்மனியின் பேர்லின் நகருக்குச் சென்று அந்த நாட்டு அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினர். அதை முடித்துக்கொண்டு ஞாயிறன்று சுவிட்ஸர்லாந்துக்குத் திரும்பும் புலிகளின் குழுவினர், அங்கிருந்து கொழும்புக்குப் புறப்படுவார்கள். கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் விசேட ஹெலிக் கொப்டரில் அவர்கள் கிளிநொச்சி புறப்படுவார்கள் எனத் தெரிகின்றது.

# அடுத்த ஆண்டு டிசம்பரில் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தேயாகும்.

## -சந்திரிகா அதனை இழுத்தடிக்க முடியாது என்கிறார் பீரிஸ்-



(நமது நிருபர்)

திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு டிசம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் எப்படியும் நடந்தே தீரும். அதை மேலும் ஒரு வருடத்துக்கு ஜனாதிபதி இழுத்தடிக்க வாய்ப்புண்டு என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படிக் கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சிப் பேச்சாளரும், முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும், எம்.பியுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் 1994ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக வெற்றியீட்டி ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க அத்தெரிவின் மூலம் 2000ஆம் ஆண்டு இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை பதவியில் நீடிப்பதற்கு அதிகாரம் பெற்றார்.

எனினும், 1999 இறுதியிலேயே - ஒரு வருடம் முன்னதாக - அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்தி அதில் வென்றார். வெற்றிபெற்ற கையோடு தமது பதவியை ஏற்கும் வகையில் பகிரங்கமாகச் சத்தியப்பிரமாணமும் செய்து கொண் டார். எனினும் அந்தத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தாம் காயமுற்றதால், தாம் தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பணியாற்றக் கூடிய நிலையில் இருப்பதை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தும் விதத்தில் தமது முதலாவது பதவிக்காலத்தை ஒட்டிய எஞ்சிய காலத்துக்கான மீள் பதவிப்பிரமாணத்தையே தாம் அப்போது செய்தார் என்றும் தமது இரண்டாவது பதவிக்காலத்துக்கான சத்தியப்பிரமாணத்தை 2000ஆம் ஆண்டு இறுதியில்தான் பிரதம நீதியரசருக்கு முன்னால் வெளியாட்கள் எவரும் இன்றி நடைபெற்ற தனியான நிகழ்ச்சி ஒன்றில் தாம் செய்தார் என்றும் அதன்படி, 2006ஆம் ஆண்டு இறுதியில்தான் தமது தற்போதைய பதவிக்காலம் முடிவடைகின்றது என்றும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பில் தற்போது கூறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி 2006 இறுதியிலேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் என்றும் அது வரை தாம் பதவியில் நீடிக்கலாம் என்றும் ஜனாதிபதி கருதுகின்றார் எனக் கூறப்பட்டது.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தல் 1999 டிசெம்பரில் நடந்ததால், ஆறு ஆண்டு கள் கழித்து 2005 டிசெம்பரில் அடுத்த தேர்தல் நிச்சயம் நடக்கவேண்டும் என்று அடித்துக் கூறுகின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி. நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாகப் பேராசிரியர் பீரிஸ் கூறியதாவது:-

இலங்கையின் அரசமைப்புப்படி ஒரு ஜனாதி பதியின் ஆட்சிக் காலத்தின் நான்கு வருடங்கள் முடிவடைந்தபின் மீதி இரண்டு வருடங்களில் எந்த சமயத்திலேனும் அவர் விரும்பிய காலத்தில் தேர்தலை நடத்த முடியும்.

ஆனால், ஜனாதிபதி தமது ஆட்சிக் காலத்தின் ஆறு வருடங்களும் முடிவடைந்த பின் இன்னும் அதனை நீடித்துக்கொண்டு போக முடியாது. உடனடியாகத் தேர்தலை நடத்தி யேயாக வேண்டும் என்றார்.

**மட் வந்தாறுமூலை கணேசா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பாடசாலை அதிபர் சி.பத்தினியன் விளக்கேற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.**



# மக்களால் துரத்தப்பட்ட துரோகிகள் எமது தேசியத்தை பிளவு படுத்துகின்றார்கள்

**– பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் –**



(பவான்)

தமிழர்களாகிய நாங்கள் ஒரு தேசியம் என்ற கொள்கையின் கீழ் அணிதிரண்டிருக்கும் இவ்வேளையில் சில விசக்கிருமிகளும் எமது மக்களால் துரத்தப்பட்ட துரோகிகளும் இணைந்து எமது தமிழ் தேசியத்தை பிரிவு படுத்துவதற்கு கங்கணம் கட்டுகின்றார்கள்.

இவ்வாறு நேற்று முன்தினம் தாழங்குடா தேசிய கல்வியியல் கல்லூரியில் தமிழ் தேசியத்தை வலியுறுத்தி மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆர்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: எனவே இதை நாம் உடைத்தெறிய வேண்டும். குறுகிய இலாபத்திற்காக இவர்கள் அரசின் கைக்கூலிகளாகச் செயற்படுகின்றார்கள். இதனை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நமது தேசியம் வடக்குக் கிழக்கு இணைந்த பிரதேசமே அதுவே தமிழ் தேசியம். எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்தான் என்று தெரிவித்தார்.

# பொதுச் சுகாதார ஊழியர் நேர் முகப்பரீட்சை இழுத்தடிப்பு

(அ.தர்மா)

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கடந்த 2002ஆம் ஆண்டு பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி நேர்முகப்பரீட்சை நடாத்துவதற்காக வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அதிகமானோர் விண்ணப்பித்தனர். ஆனால் இது வரை இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிலும், சுகாதார திணைக்களங்களிலும் ஆளணி வெற்றிடங்கள் அதிகளவு இருந்தும் இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படாதையிட்டு விண்ணப்பதாரிகள் மனமுடைந்து விரக்தியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலை தொடராமல் நேர்முகப் பரீட்சை நடத்தி தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்படி மன்றாட்டக் கடிதங்களை விண்ணப்பதாரிகள் தனித்தனியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவசர அவசரமாக அனுப்பியுள்ளனர்.

# பதில் கிடைக்காத பட்டதாரிகள் நிதியமைச்சில் முறையிடவும்

(நமது நிருபர்)

வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த வேலையற்ற பட்டதாரிகளில் இதுவரையில் உரிய பதில் கிடைக்காதவர்கள் நிதியமைச்சிலுள்ள மேன்முறையீட்டு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்திற்கு தற்பொழுது தொழில் புரிந்து வருவோரும் விண்ணப்பித்ததாகக் குறிப்பிட்ட அமைச்சர் தற்பொழுது பயிற்சி பெற்று வரும் பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சியின் பின்னர் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் செய்திருந்த 41 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தற்பொழுது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அரச ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முன்பு விஷேட பயிற்சிகள் வழங்குவது எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரபோதினி செயற்றிட்ட மீளாய்வு ஒன்று கூடல்

(சி.பி.ஹரிச்சந்திரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரபோதினி திட்டத்தின் செயல்பாடுகளை மீளாய்வு செய்யும் ஒன்று கூடல் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத்தில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் எகெட் நிறுவனப் பணிப்பாளர் அருட்பணி ஸ்ரீதரன் சில்வஸ்ரர் ஒன்றுகூடலை ஆரம்பித்து வைத்தார்.

ஐரோப்பிய ஒன்றிய ஆலோசகரும், இத்திட்டத்தின் கண்காணிப்பாளருமான நிக்பரன்சுவாத், தேசிய சமாதானப் பேரவை ஊடகப் பொறுப்பாளர் எஸ்.கிருஷாந்தி வடக்குக் கிழக்கு இணைப்பாளர் எஸ். மங்களேஸ்வரி, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் எஸ். பாலக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிராமிய மட்டத்தில் செயலாற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் பற்றியும் ஆராய்ந்தனர். நிகழ்ச்சித் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டது.

ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்: கிராமங்கள் பலவற்றில் விதவைகள் பலர் எந்தவித உதவியுமின்றி இருக்கின்றார்கள். அவர்களின் பிள்ளைகள் கூட பாடசாலை செல்லாமல் இருக்கின்றார்கள்.

அவர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தி பெண்கள் உரிமைகள் கிடைக்கக் கூடிய உதவிகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கி பிரபோதினி செய ற்றிட்டத்தில் அவர்களையும் பயன் பெறவைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு ஆலோசனைக் கூட்டம்

(தர்மா)

ஆலையடி வேம்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.ஐ. புகாரி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தலைமைதாங்கிய அக்கரைப்பற்றுப் பொலிஸ் பொறுப்பதிகாரி ரி.எம்.ஐ.புகாரி உரையாற்றுகையில்:

முச்சக்கர வண்டிச் சாரதிகள் அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களைச் செலுத்துவது சட்டத்திற்கு மாறான ஒன்றாகும். தற்போது எமது பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு சாரதிகளும் மிகவும் அவதானத்துடன் நடந்து வாகன விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

# தொகுதி வாரி தேர்தல் முறை சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவத்தில் பாரிய சரிவை ஏற்படுத்தும்

**– ஜனாதிபதியின் திட்டம்பயனின்மையை தோற்றுவித்து விடும் என்கிறது மெஸ்றோ நிறுவனம் –**

(மருதமுனை நிருபர்)

தற்போதைய தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வந்து தொகுதிவாரி தேர்தல் முறையினை அறிமுகப்படுத்த உத்தேசித்திருப்பதான ஜனாதிபதியின் திட்டம் சிறுபான்மை சமூகங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பலத்த சரிவினையும் பயனின்மையையும் தோற்றுவிக்கும். இவ்வாறு முஸ்லிம் கல்வி சமூக ஆய்வுகள் நிறுவனம் (மெஸ்றோ) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கட்சிக்கட்டில் அமர்ந்து அறுதிப் பெரும்பான்மையற்ற நிலையில் அரசியல் அமைப்பதும், தேர்தல் முறையிலும் மாற்றம் செய்ய உள்ளதாகத் தீர்மானித்த விடயம் இ.தொ. காங்கிரஸ் அரசுடன் இணைந்து பின்னர் நிதர்சனமாகி விட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமானால் அதற்கு அரசியலமைப்பில் மாற்றம் செய்வது இன்றியமையாத தேவையாகவுள்ளது.

ஏனெனில் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்தை நீடிக்கவும், தொடர்ந்து தக்க வைக்கவும், அரசின் பிரதான பங்காளிக் கட்சியாகிய ஜே.வி.பி.யின் நெருக்கடிகளை முறியடிக்கவும் ஜனாதிபதிக்குள்ள ஒரேயொரு அதிஷ்டம் இவ்வரசியல் அமைப்பு மாற்றமும், தேர்தல் முறை மாற்றமுமே. இதன் மூலம் பலத்த பாதிப்பை சந்திக்கப் போவது முஸ்லிம் சமூகமே. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினையும் ஒழித்து விட்டால் தேசிய அரசியலில் அடிக்கடி தோன்றும் தொங்கு நிலை அகற்றப்பட்டு பெரும்பான்மை சிங்கள மக்களில் அரசாங்கத்தை ஸ்திரமாக அமைப்பது வெகு இலகு வாகிவிடும். இதன் மூலம் சிறுபான்மைக் கட்சிகளின் தயவில் தங்கி நிற்பது தவிர்க்கப்பட்டு விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறையில் வானொலி நிகழ்ச்சிகள் தெளிவில்லை ஊடக அமைச்சருக்கு மக்கள் மனு


(விரி.சகாதேவராஜா)

அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தில் பல பாகங்களிலும் தேசிய வானொலிகள் சிலவற்றின் நிகழ்ச்சிகள் தெளிவில்லாமலுள்ளது.

குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை நிகழ்ச்சிகள் பூரணமாக கேட்க முடியவில்லை. சில வேளைகளில் அரைகுறையாக தெளிவில்லாமலுள்ளது. இதனால் பிபிசி, விடியும் வேளை, தேசிய பார்வை போன்ற பல நிகழ்ச்சிகளை கேட்கும் வாய்ப்பு அற்றுப் போகின்றது.

தென்றல் அலை வரிசை கூட சில வேளைகளில் மிகவும் மோசமாக தெளிவில்லாமல் இருப்பதாக நேயர்கள் குறை கூறுகின்றனர். சூரியன் அலைவரிசையும் தெளிவில்லாமல் இருப்பதாக குறை கூறப்படுகின்றது.

ஊடகத்துறை அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் இருக்கின்ற அலைவரிசைகளை தெளிவாகக் கேட்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெற்ற வைபவத்தில் ஏ.எம்.முஸ்தபா ஆசிரியர் உரையாற்றுவதையும், ஆசிரியர்களான ஷாஹிதாஹிதாயா,ஜவாஹிறா,பௌசுன்னிஹாரா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் ஒரு பகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படமும் தகவலும்: –பி.எம்.ஏ.காதர்)

# நீர்ப்பாய்ச்சுனர்களுக்கான சம்பளத்திட்டத்தை ஏற்படுத்துமாறு விவசாய அமைச்சிடம் கோரிக்கை

(விரி.சகாதேவராஜா)

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நாடுபூராக சேவையாற்றும் நீர்ப்பாய்ச்சுனர்களை நிரந்தரமாக்கியது போன்று அவர்களுக்கென தனியான சம்பளத்திட்டத்தை ஏற்படுத்தி உதவுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு விவசாய நீர்பாசன காணி அமைச்சர் அனுரகுமார திஸாநாயகவிடம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''நீர்ப்பாய்ச்சுனர்களுக்கு சம்பளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மூன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தாகக் கூறப்படுகின்றது. அமைச்சின் தகவலின்படி அவ்வாறான பத்திரங்கள் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், நீர்ப்பாய்ச்சுனர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து நீதி வழங்குமாறு வேண்டுகின்றோம்.பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்பியுள்ளது.

# அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசத்தில் இயங்க மறுக்கும் கையடக்கத்தொலைபேசிகள்

**–பாவனையாளர்கள் விசனம்–**

(விரி.சகாதேசராஜா)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் கையடக்கத் தொலைபேசிகள் சில இயங்க மறுக்கின்றன.

''மொபிடெல்'' சிம்கள் ஆயிரக்கணக்கில் இப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட போதிலும் இன்னும் அதற்கான தொடர்பு அலைவரிசை ஏற்படுத்தப்படவில்லை. அதனால் மொபிடெல் பாவனையாளர்கள் கடந்த 08 மாதங்களாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இதனிடையே மாதா மாதம் தொலைபேசிக்கட்டணப் பட்டியலும் வருகிறது. அறவே பேசமுடியாத கையடக்கத் தொலைபேசிக்கு கட்டணம் அறவிடப்படுவது ஏன்? என்று பாவனையாளர்கள் ஆவேசத்துடன் கேட்கின்றனர். இதே வேளை ''டயலொக்'' பாவனையாளர்கள் காரைதீவு, நிந்தவூர் போன்ற பகுதிகளில் பாவிக்க முடியாமல் இருப்பதாக பாவனையாளர்களும் குற்றம் சாட்டுகின்றனர். இந்த ஏமாற்று வித்தைகளுக்கு முடிவதெப்போது?

# நிவாரணம், புனர்வாழ்வு மீளிணக்கத்துக்கான அமைச்சு

## வட கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டம்

# வடகிழக்கு நீர்பாசன விவசாயத் திட்டம். கட்டம் II

வடகிழக்கு நீர்பாசன விவசாயத் திட்டம் கட்டம் II உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம் மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம், பொலனறுவை, மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2005-2010 காலப் பகுதிகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும், வடகிழக்கு மாகாண சபையினாலும் கீழ்க் குறிப்பிடப்படும் தகமைகளையும், அனுபவங்களையும் பெற்றவர்களிடமிருந்து **சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்** (13 வெற்றிடங்கள்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**04.07.2004** அன்று தேசிய நாளிதழ்களில் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கேற்ப, இப் பதவிக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் மீண்டும் இவ்விளம்பரத்திற்கேற்ப விண்ணப்பிக்க கோரப்படுகின்றீர்கள்.

### பொது விதிகள்:-

**01.** இப் பதவி தற்காலிகமானது, முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். பின்னர் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும், முதல் வருட சேவை காலத்தில் திருப்திகரமாக சேவை ஆற்றியிருப்பினும் தொடர்ந்தும் சேவை நீடிப்பு வழங்கப்படும்.

**02. வயதெல்லை:-** விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது.

**03. சம்பளம்:-**
**பட்டதாரிகள்.**

**3.1** புதிய பட்டதாரிகளுக்கு மாதாந்த சம்பளமாக ரூபா 9375/=ம் இடைக்காலப் படியாக ரூபா 2200/=ம் வழங்கப்படும் அல்லது மற்றவர்கள் விடயத்தில் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 10ன் படி சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இந்நியமனம் முதலில் 03 மாத காலத்திற்கு பயிற்சி அடிப் [illegible]யிலும் அதன் பின்பு ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும். பயிற்சிகள் முதலாவது மாதத்தில் திருகோணமலையிலும்,அதன் பின்பு அந்தந்த மாவட்ட நி[illegible]ப காரியாலயத்திலும் வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 6000/= பயிற்சிக்கால படியாக வழங்கப்படும்.

**3.2. டிப்ளோமா கற்றை நெறியாளர்கள்:-**
மாதாந்தச் சம்பளமாக ரூபா 5570/=ம் இடைக்காலப் படியாக ரூபா 2200/=ம் வழங்கப்படும் அல்லது மற்றவர்கள் விடயத்தில் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 10ன் படி சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**3.3 கா.பொ.த. (உயர்தரம்) தகமையுடையவர்கள்:-**
மாதாந்த சம்பளமாக ரூபா 5240/= ம் இடைக்காலப் படியாக ரூபா 2200/=ம் வழங்கப்படும் அல்லது மற்றவர்கள் விடயத்தில் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.10.ன் படி சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**4. கொடுப்பனவு:-**

**4.1** மாதாந்த அடிப்படையில் வேதனம் வழங்கப்படுவதுடன் சேவைக்கேற்ப படியும் வழங்கப்படும்.

**4.2.** அரச சேவையிலிருந்து விடுவிக்கப்படும் அல்லது இளைப்பாறிய உத்தியோகத்தரின் வேதனம் அவர் கடைசியாக பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும். படிகள் சேவை அடிப்படையில் வழங்கப்படும்.

**05.** விண்ணப்பதாரி (1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். (2) திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்தில் கடமை புரிவதற்கான சுக தேக ஆரோக்கியத்துடனும் (3) மையக்கிராமங்களை அண்டிய பகுதிகளில் வசிப்பவராகவும் (4) நல்ல தொடர்பாடல் அறிக்கை எழுதும் திறமையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்கும் முறை:-** தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது கல்வித் தகமைகள், தொழில்தகமை, பிறந்த திகதி, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகிய சுய விபரங்களைக் குறிப்பிட்டு தமது விண்ணப்பத்தினை தயாரித்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் **பிரதித் திட்டப் பணிப்பாளர், நியாப், யாட் வீதி, மட்டக்களப்பு.** எனும் முகவரிக்கு **10.11.2004** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தமது திணைக்களத் தலைவர் / செயலாளர்களூடாக அனுப்புதல் வேண்டும். **பெண்களின்** விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**07. தெரிவு:-**
பொருத்தமான பரீட்சார்த்திகள் மாவட்ட மத்தியில் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவு செய்யப்படுபவர்களில் 50வீதமான விண்ணப்பதாரிகள் பெண்களாக இருப்பார்கள்.

**08. கடமைகளும், பொறுப்புகளும்:-**

# மையக் கிராமங்களிலுள்ள மக்களுக்கும், பிரதேச மட்ட உத்தியோகத்தர்களுக்கும் இடையே திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களிடையே நெருக்கமான தொடர்ப்பினை ஏற்படுத்தல்.
# மையக் கிராமங்களுக்கான சமூக பொருளாதார நிலைமை சம்பந்தமான அறிக்கையினையும், கிராம அபிவிருத்தித் திட்டத்தினையும், சமூக செயற்திட்ட அறிக்கையினையும், ஜீவனோபாய ஆதாரத் திட்டத்தினையும் தயாரித்தல்.
# திட்டத்தின் சிவில்சார் கூறுகளை திட்டமிட்டு அமுலாக்கி இணைப்பாக்குதல்.
# சிறு குழு அமைத்தல், சிறுகுழு சேமிப்பு நுண் கடன் பராமரிப்பு, பதிவேடுகள் பேணுதல் போன்றவற்றில் பயிற்சிகள் நடாத்துதல்.
# மையக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஜீவனோபாய ஆதாரத் திட்டம், சிறு குழுக்கள் அமைத்தல், சிறுகுழு சேமிப்பு, நுண் கடன் பராமரிப்பு, பராமரிப்பு, பதிவேடுகள் பேணுதல் போன்ற விடயங்களினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி இணைப்பாக்குதல்.
# கிராம மட்ட அமைப்புக்களின் நிறுவன கட்டமைப்பு விருத்திக்கு உதவுதல்.
# மையக் கிராமங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குப்படுத்துதல்.
# திட்ட முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.

**09. தேவையான கல்வித் தகமைகளும், அனுபவமும்:-**
விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.

**9.1** சமூகவியல் / விஞ்ஞானம் / விவசாயம்/புவியியல் / பொருளாதாரம் / வர்த்தகம் / வர்த்தக முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஒன்றில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருப்பதுடன் சமூகவலுவூட்டல் சம்பந்தமான வேலைகளில் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

**9.2** விவசாயம் / சமூக விஞ்ஞானம் / வர்த்தக அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஒன்றில் டிப்ளோமா மற்றும் சமூகவலுவூட்டல் சம்பந்தமான வேலைகளில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது.**

**9.3.** புவியியல்/ கணக்கியல்/ வர்த்தகம்/ பொருளாதாரம்/ வர்த்தகக் கல்வி ஆகிய பாடங்கள் அடங்கிய க.பொ.த. (உயர்தரம்) உடன் சமூக வலுவூட்டல் வேலைகளில் ஆகக் குறைந்தது 8 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**9.4** ஆங்கிலத்திலும், தமிழ் / சிங்கள சமூகத்தினருடன் சரளமான தொடர்பாடல் திறனும் இருப்பின் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்**
**கச்சேரி,**
**மட்டக்களப்பு.**

# அபுகிறைப் சிறைச்சாலை கைதிகளின் சித்திரவதைக்கு சி.ஐ.ஏ.தான் காரணம்



(பாக்தாத்)

அபுகிறைப் சிறையில் ஈராக் கைதிகளை சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டதே அமெரிக்கப் புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏ. வும், அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளும் தான் என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கில் அபுகிறைப் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக்கியர்களை பிரிட்டன், அமெரிக்க இராணுவ வீரர்கள் சித்திரவதை செய்தனர். உடைகளை உரித்து நிர்வாணமாக்கினர். நாய்களை விட்டு கடிக்க விட்டனர். பாலியல் சித்திரவதை செய்தனர். இந்த விவகாரம் பெரிய அளவில் வெடித்தது. கைதிகளுக்கு நடந்த கொடுமை வெளி உலகுக்கு தெரிந்தது. இதன் மூலம், கைதிகளுக்கு நிவாரணம் கிடைத்தது.

கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்தப்படுகின்றது. சிறையில் பணி புரிந்த அமெரிக்க வீரர்களான இவான் பெரிட்ரிக், கப்டன் டொனால்ட் ரீசி ஆகியோர் மீது கடும் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. இதில், பெரிட்ரிக் மீது மட்டும் ஐந்து குற்றச்சாட்டுகள் உள்ளன.

ஈராக்கின் தலைநகர் பக்தாத் அருகேயுள்ள நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை விசாரணை நடந்தது. அபுகிறைப் சிறையில் சித்திரவதைகளை நேரில் பார்த்த பலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். இந்த சாட்சிகள் மூலம் பல புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும், பெரிட்ரிக், டொனால்ட் ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கைதிகளை சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டதே அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ., தான் என்ற திடுக்கிடும் தகவல் வெளியானது. பெரிட்ரிக் கூறுகையில், சி. ஐ.ஏ.,வின் அதிகாரம் பெற்ற ஓ.ஜி.ஏ., என்ற அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இரவில் சிறைக்கு வருவார்கள். கைதிகளை ஒரே அறையில் அடைத்து, அவர்களை தூங்க விடாமல் விசாரணை செய்வார்கள். இது போல் நடத்திய விசாரணையால் ஒரு கைதிக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. அடிக்கடி பயந்து, பயந்து அலறுவார் என்று பெரிட்ரிக் கூறினார். அமெரிக்காவில் இருந்து வீடியோ மூலம் வாக்குமூலம் அளித்த டொனால்ட்டும் இதேபோல் தெரிவித்தார். இதன்மூலம், அபு கிறைப் கொடுமைகளுக்கு காரணமாக இருந்தவை சி.ஐ.ஏ.,வும், அமெரிக்க ராணுவ உயரதிகாரிகளும் தான் என்பது தெரியவந்துள்ளது. அபுகிரைப் சித்திரவதைப் பற்றிய தகவல்கள் பரபரப்பாக வெளியான போது, இராணுவம் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை பென்ரகன் உறுதியாக நிராகரித்தது. சிறையில் பணி புரிந்த சில மோசமான அமெரிக்க, பிரிட்டன் ராணுவ வீரர்கள் சிலர் இது போன்ற காரியத்தை செய்து விட்டனர் என்று பென்ரகன் கூறியது. இப்போது அதன் குட்டு வெளிப்பட்டு விட்டது.


## அமெரிக்க விமான விபத்தில் 13 பேர் பலி; இருவர் உயிர் தப்பினர்

(கன்சாஸ் சிட்டி)

அமெரிக்காவில் நடந்த விமான விபத்தில் 13 பேர் பலியாயினர். அமெரிக்கா, மிசோரி மாகாணத்தில் சிமிர்னா என்ற தனியார் விமான போக்குவரத்து நிறுவனம் உள்ளது. இதன் விமானம், இதே மாகாணத்தில் உள்ள கிர்க்ஸ் வில்லே என்ற விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது, திடீரென ஏற்பட்ட விபத்தில் விமானம் நொறுங்கியது. இதில், இரண்டு பயணிகள் மட்டுமே உயிர்தப்பினர். விமானி, துணை விமானி உட்பட 13 பேர் பலியாயினர். விபத்துக்கான காரணம் தெரியவில்லை. விமானம் தரையிறங்கும் போது கூட, விமானியிடம் இருந்து அவசர உதவி அழைப்பு எதுவும் வரவில்லை. என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உலக செய்திகள்

## ஜப்பானில் வீசிய கடும் சூறாவளியினால் 55 பேர் பலி; 300 பேர் படுகாயம்



(டோக்கியோ)

ஜப்பானில் வீசிய சூறாவளி அந்நாட்டின் பெரும் பகுதியை துவம்சம் செய்து விட்டது. 55 பேர் பலியாயினர். 300 பேர் காயமடைந்தனர்.

ஜப்பானில் கடுமையான சூறாவளி வீசுகின்றது. பத்தாண்டுகளில் இல்லாத வகையில் பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த வியாழக்கிழமை வரை சூறாவளியால் ஒருவர் மட்டுமே இறந்தார். நேற்று முன்தினம் இதன் பாதிப்பு கடுமையாக இருந்தது. 150 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று அடித்து பேய் மழை பெய்தது.

நாட்டின் பல பகுதிகளில் கடும் மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. வீடுகள் இடிந்தன. பெரிய மரங்கள் வேருடன் வீழ்ந்தன. வெள்ளத்தில் வாகனங்கள் மிதந்தன. ரயில்கள் தடம் புரண்டன. நாடு முழுவதும் போக்குவரத்து பாதித்தது. விமான போக்குவரத்துகள் முழுமையாக ரத்து செய்யப்பட்டன. சூறாவளியால் ஏற்பட்ட விபத்துகளில் 55 பேர் பலியாயினர். 300 பேர் காயமடைந்தனர். இந்த சூறாவளியின் பெயர் லடைபூன் டோகேஜ். பல்லி கூட்டம் என்று இதற்கு அர்த்தம். இந்த சூறாவளி நேற்று முன்தினம், பசுபிக் கடலில் ஜப்பானின் கிழக்கு நோக்கி நகர்ந்தது. ஜப்பானில் கடந்த பத்தாண்டுகளில் வீசிய சூறாவளிகளில் இந்தளவுக்கு உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டதில்லை. மீட்புப் பணிகளை அரசு முடுக்கி விட்டுள்ளது.

## முன்னாள் அமைச்சர் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

கஷ்மீரில் முன்னாள் அமைச்சரும் தேசிய மாநாட்டு கட்சிப் பிரமுகருமான சதர் பெக், அவரது வீட்டிற்கு அருகே அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சப்தர் பெக் வீடு ஆனந்த் நாக்கில் உள்ளது. வீட்டின் அருகே பாதுகாவலர் ஜாவித் அகமதுவுடன் நடந்து சென்றார். அப்போது மறை ந்திருந்த அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதில், சப்தர் பெக் அதே இடத்தில் பலியானார்.

## சீன நிலக்கரி சுரங்க விபத்தில் 56 பேர் பலி; 154 பேரைக் காணவில்லை

(பிஜீங்)

சீனாவில் நடந்த நிலக்கரி சுரங்க விபத்தில் 210 பேர் பலியாயினர். உலகிலேயே, சீனாவில் அதிகளவில் நிலக்கரி சுரங்க விபத்துகள் நடக்கின்றன. சுரங்கத்தில் ஏற்படும் வெடி மற்றும் வெள்ளத்தால் பெருமளவு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. நேற்று முன்தினமும் அதே போன்ற விபத்து நடந்தது.

ஹெனன் மாகாணத்தில் உள்ள செங்மீ நிலக்கரி சுரங்கத்தில் கடந்த வியாழக்கிழமை ஏராளமான ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். சுரங்கம் தோண்டும் போது வெடி விபத்து ஏற்பட்டது. 290 பேர் உடனடியாக தப்பி மேலே வந்து விட்டனர். 210 பேர் வரை உள்ளே சிக்கிக் கொண்டனர்.

மீட்புப் பணி வேகமாக நடக்கின்றது. 56 பேர் பலியானதாக இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ளது. மற்றவர்கள் நிலை தெரியவில்லை. சுரங்க விபத்துகளில் உடனடியாக தப்பியவர்களைத் தவிர, உள்ளே சிக்கிக் கொண்ட யாரும் தப்பி வந்ததில்லை. எனவே, மற்ற ஊழியர்களும் பலியாகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

## இந்தோனேசிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்றது.

(ஜகார்த்தா)



இந்தோனேசியாவில் புதிய அதிபர் சுசிலோ பாம்பங் தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவி ஏற்றது. இந்தோனேசியாவில் சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் மேகவதியும், சுசிலோ பாம்பங்கும் போட்டியிட்டனர். இதில் பாம்பங் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இதை தொடர்ந்து பாம்பங் தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவி ஏற்றது. ஊழலற்ற அரசை நடத்துவேன், இதற்கு அமைச்சரவை சகாக்களும் ஒத்துழைக்க வேண்டும், என பாம்பங் தெரிவித்தார். `இந்தோனேசியாவை பொருளாதாரத்தில் மேம்படுத்தும் பொருட்டு, பொருளாதார வல்லுனர்கள் பலர் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர்

## காலிஸ்தான் தீவிரவாதிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது

(ஜெய்ப்பூர்)


காங்கிரஸ் பிரமுகர் மகனை கடத்திச் சென்ற வழக்கில் காலிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் பிரமுகர் ராம் நிவாஸ் மிர்தாவின் மகன் ராஜேந்திர மிர்தா கடந்த 95ம் ஆண்டு பெப்ரவரி 17ல் காலையில் வாக்கிங் சென்று கொண்டிருந்தார். அப்போது, ராஜேந்திர மிர்தாவை காலிஸ்தான் விடுதலைப்படை உறுப்பினர் தயாசிங் கோரியா கடத்திச் சென்றார்.


# பிரசாரக் கூட்டத்தின் போது அதிபர் புஷ் கெரியைத் தாக்கிப் பேசியுள்ளார்

(ஏவு கிளையர்)

தீவிரவாதத்திற்கு எதிரான போரின் அடிப்படையை கெர்ரி தவறுதலாக புரிந்து கொண்டுள்ளார், என்று அமெரிக்க அதிபர் புஷ் குற்றம் சாட்டினார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம் 2ம் திகதி நடைபெறுகின்றது. இதில் ஆளும் குடியரசுக் கட்சி வேட்பாளராக அதிபர் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஜோன் கெரி களமிறங்கியுள்ளார்.






ஐயோவா மாகாணத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு புஷ் பேசினார். ஜனநாயக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரியை தாக்கிப் பேசினார்.

அவர் பேசியதாவது:

செப்டம்பர் 11 தாக்குதல் அமெரிக்க மக்களிடம் மாறாத காயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்தே தீவிரவாதத்திற்கு எதிரான போரை அமெரிக்கா தொடக்கியது. ஆப்கான் மற்றும் ஈராக்கில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கைகளும் தொடங்கின.

ஈராக்கில் நாசச் செயல்களை செய்து வரும் தீவிரவாதி அபு முசாப் அல்- சர்க்காவி இப்போது ஒசாமா பின்லாடனுடன் கைகோர்த்துள்ளான். தீவிரவாதிகளை முற்றிலுமாக ஒழிக்க அமெரிக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி தீவிரவாதத்திற்கு எதிரான போரின் அடிப்படையை தவறுதலாக புரிந்து கொண்டுள்ளார். அவரால் தீவிரவாதத்தை புரிந்து கொள்ள முடியாது. இவ்வாறு புஷ் பேசினார்.



*நவராத்திரியை முன்னிட்டு மதுரை இம்மையில் நன்மை தருவார் கோயிலில் விநாயகருக்குஞானப்பழம் கொடுத்த அலங்காரத்தில் மத்தியபுரி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்த காட்சி*

# பாகிஸ்தானில் நான்காவது சதத்தைப் பூர்த்தி செய்த சமரவீர

பைசலாபாத் டெஸ்டில் வேகப்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் தொடர்கிறது. பாகிஸ்தானுக்கு அக்தர், சமி கைகொடுத்தனர். பதிலுக்கு இலங்கை தரப்பில் பெர்னாண்டோ, வாஸ் அசத்த, பாகிஸ்தான் அணி திணறிப் போனது.

பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி பைசலாபாத்தில் நட க்கிறது. இதில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தில் தனது அபார ஆட்டத்தை தொடர்ந்த சமரவீர, டெஸ்ட் அரங்கில் நான்காவது சதம் அடித்தார்.




இது அன்னிய மண்ணில் இவர் அடிக்கும் முதலாவது சதமாகவும் அமைந்தது. 232 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்கள் எடுத்த இவர், அக்தர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ரொத் 33 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் இலங்கை அணி முதல் சுற்றில் 243 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது.

பாகிஸ்தான் தரப்பில் அற்புதமாக பந்துவீசிய சோயப் அக்தர் 5 விக்கெட் வீழ்த்தினார். முகமது சமி நான்கு விக்கெட் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதல் சுற்றை துவக்கிய பாகிஸ்தானும் வேகத்தில திணறியது. பெர்னாண்டோ பந்துவீச்சில் யாசிர் மீது (58), அசிம் கமால்(17) வெளியேறினர். மலிங்காவிடம் பர்கத் (11) தனது விக்கெட்டை பறிகொடுத்தார். ரொத் சுழலில் தலைவன் இன்சமாம்(32), யோகன்னா(17) வெளியேறினர். சோயப் மாலிக் 48 ஓட்டங்களுக்கு ஆட்டமிழப்பு ஏற்பட்டது.

அடுத்து வந்த நம்பிக்கை நாயகன் அப்துல் ரசாக், வாஸ் வேகத்தில் 39 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இப்படி வந்தவர்கள் எல்லாம் ஒரு நாள் போட்டி போல் விளையாட பாகிஸ்தானின் ஸ்கோர் உயர வாய்ப்பில்லாமல் போனது. நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி முதல் சுற்றில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

அக்தர் 6, சமி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். தற்போது பாகிஸ்தான் 13 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. கைவசம் இன்னும் 2 விக்கெட் மட்டுமே இருப்பதால், மிகப் பெரும் முன்னிலையை எட்டும் பாகிஸ்தானின் கனவு நனவாக வாய்ப்பில்லை. இலங்கை தரப்பில் பெர்னாண்டோ, ரொத் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.



மாட்ரிடில் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் தாய்லாந்தின் பாரடான் ''சாய்பன் 7-6, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்பெயின் வீரர் அலெக்ஸ் கோரட்ஜாவை வீழ்த்தினார். வென்ற மகிழ்ச்சியில் சாய்பன்.




## சென்னை டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட அனுபவம் பற்றி கூறுகின்றார் கில்லெஸ்பி

சென்னை டெஸ்ட்



சமநிலையில் முடிய ஜேசன் கில்லெஸ்பி ஆட்டமும் ஒரு காரணம். அவர் மட்டும் விரைவில் ஆட்டமிழந்திருந்தால், நான்காம் நாளிலேயே இந்தியா வென்றிருக்கும். மார்ட்டினுடன் இணைந்து அவர் சேர்த்த 139 ஓட்டங்கள், ஆட்ட த்தை திசை திருப்பி விட்டது. இந்திய பவுலர்களைக் தாக்கு ப்பிடித்து, சளைக்காமல் நின்றது எப்படி?

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஜேசன் கில்லெஸ்பி, கிளென் மெக்ராத், டேரன் லேமன் மூன்று பேரும் மும்பையில் ஜாலியாக விடுமுறையை அனுபவிக்கிறார்கள். கில்லெஸ்பி நேற்று முன்தினம் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அவரிடம், சென்னை டெஸ்ட் ஆட்டம் பற்றித் தான் கேள்விகள் கேட்கப்பட்டன.

கிரிக்கெட் வாழ்க்கையில், பந்து வீச்சாளராகச் சாதித்திருந்தாலும், துடுப்பாட்ட வீரராக எனக்கு நிறைவளித்த முதல் போட்டி அதுதான். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தலைவன் கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்த போது, ஆட்டம் ஏறக்குறைய எங்களிடம் இருந்து விலகி விட்டது. அப்படி ஒரு இக்கட்டான நிலையில் மார்ட்டினுடன் இணைந்து மிகச்சிறந்த ஸ்கோர் செய்யவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என்னிடம் இருந்தது.

அன்றைய ஆட்டம் முடிந்ததும், நான் ஓய்வு அறைக்குச் செல்லவே இல்லை. மிகக் கடுமையாக கிரிக்கெட் பயிற்சி செய்தேன். அது எனக்கு அடுத்த நாள் காலையில் உதவியது. உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களான அனில் கும்ளே, கர்பஜன் சிங் இருவரையும் எனது துடுப்பாட்டம் அன்று வெறுபளித்திருக்கும். இதற்குக் காரணம், முதல் நாள் நான் செய்த கிரிக்கெட் பயிற்சி மற்றும் எதிர்முனையில் எனக்கு ஒத்துழைப்பு அளித்த மார்ட்டின் இரண்டும்தான். இவ்வாறு தெரிவித்துள்ளார்

# வளத்தாப்பிட்டி கிராமத்தில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகள் தீர்க்கப்படவேண்டும்

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் எல்லைக் கிராமமான வளத்தாப்பிட்டியில் தமிழ் மக்கள் பூர்விகமாக செறிந்து வாழ்கின்ற ஒரு கிராமமாகும்.

கடந்த கால யுத்த சூழ்நிலைகளினால் சொத்துக்கள், உடைமைகள் இழப்பு, உயிர்ச் சேதம் ஆகியவற்றினால் இக்கிராம மக்களும் மிகவும் பாதிப்புக்குட்பட்டவர்கள் என்றே கூறலாம். இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் இக்கிராம மக்கள் பல்வேறு கஷ்ரங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் போன்ற வசதிகள் இன்றி ஒரு அவல வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

மிகவும் முக்கிய பிரச்சினையான வைத்திய வசதிகள் இல்லாததால் அம்பாறை பொது வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமையே வளத்தாப்பிட்டி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வைத்திய வசதியைப் பெற ஒருவாறு கஷ்டப்பட்டு வைத்திய சாலைக்குச் சென்றால் பெரும்பான்மையின வைத்தியர்களால் தமிழர்கள் என்ற காரணத்தினால் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு நிலையும் இவ்வைத்தியசாலையில் இருப்பதால் இந்நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வந்தே தமக்குரிய வைத்திய சிகிச்சையினை வளத்தாப்பிட்டி மக்கள் பெற வேண்டிய ஒரு அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்து மகப்பேற்று வைத்தியசாலை இப்பகுதியில் இல்லாததால் கற்பிணித் தாய்மார்கள் மிகவும் கஷ்ரங்களுக்கு மத்தியில் தவிக்கின்றனர்.இவ்வாறான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய வசதிகள் இன்மையால் இக்கிராமத்தில் ஓரளவு வசதியாக வாழ்ந்த மக்களில் அதிகமானவர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து குடியமர்ந்து வருகின்றனர்.

வறுமையான மக்களே தற்போது வளத்தாப்பிட்டியில் நிரந்தரமாக வசிக்கின்றனர். இதனால் இக்கிராமமானது சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் சுவீகரிக்கப்படும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் இக்கிராமத்தை விட்டுச் சென்று வேறு இடங்களில் வசிக்கும் மக்கள் தமக்குச் சொந்தமான காணிகளை அதிகளவு சிங்களவர்களுக்கே விற்கின்றனர்.

இதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அவர்கள் வளத்தாப்பிட்டி கிராமத்தையும் ஆக்கிரமிக்கும் நோக்கோடு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் இக்கிராமத்தில் வறுமையின் மத்தியில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்கின்ற தமிழ் மக்கள் மிகவும் அச்சத்துடனேயே இக்கிராமத்தில் வசிக்கின்றனர்.

இவர்களும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பயந்து இடம் பெயர்ந்தால் வளத்தாப்பிட்டி என்ற கிராமம் ''வளத்தாப்பிட்டிய'' என்ற பெயர் மாற்றத்துடன் சிங்களக் கிராமமாக மாறும். ஒரு அபாய நிலையிலுள்ளது.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்களின் சொந்த நிலமாகிய வளத்தாப்பிட்டிக் கிராமத்தின் நிலை நாளுக்கு நாள் நிர்க்கதியான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறு தமிழ் மக்கள் வாழுகின்ற அம்பாறை மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களும் பெரும்பான்மையினரின் ஆக்கிரமிப்புக்குட்பட்டுக் கொண்டே வருகின்றது.

இதனால் எதிர்க்காலத்திலே அம்பாறையில் தமிழ் மக்கள் இருந்தார்களா? என்ற கேள்வியைக் கூட சிங்களவர்கள் கேட்பதற்குப் பின்னிற்கமாட்டார்கள்.

அத்துடன் தமிழ் கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்கு வசிப்பதற்குச் செல்கின்ற மக்கள் தமிழருக்கு சொந்தமான பூர்விக நிலங்களை வேற்று இன மக்களுக்கு விலைக்கு விற்பதனை தயவு செய்து தமிழ் தாயகத்தில் பற்றுள்ள அனைத்து தேசப்பற்றாளர்களும் தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலை தொடர்ந்து ஏற்படாமல் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழ்த் தேசப் பற்றாளர்களின் கைகளிலேயே இருக்கின்றது. விரைவில் இந்த நில ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமென வளத்தாப்பிட்டி மக்கள் எங்கள் குரல் ஊடாக உரிய வர்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றனர்.

அ.தர்மா
சேனைக்குடியிருப்பு.

# எங்கள் குரல்

## மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படைவசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக சொத்துக்களையும், உடமைகளையும் இழந்து அகதி முகாம்களில் வாழ்ந்த மக்கள் தற்போது ஓரளவு சமாதானச் சூழ்நிலை காரணமாக தங்களது சொந்த இடங்களுக்கு வந்து மீளக் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு மீளக் குடியேறிய தமிழ் குடும்பங்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் செய்யப்படவில்லையென அம்பாறை மாவட்டப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது மீளக் குடியேறியுள்ள மக்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களை எதிர்கொள்வதாக மீள்குடியேறிய மக்கள் ஈழநாதமூடாக தமது கவலையைத் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியேறிய கிராமங்களான தாண்டியடி, காஞ்சிரங்குடா, பாவட்டான், உடும்பன்குளம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு போன்ற கிராமங்களில் மீள் குடியேறியுள்ள மக்கள் போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர், போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளின்றி மக்கள் மிகவும் அவதியுறுவதாக அவர்கள் அங்கலாய்கின்றனர்.

குறிப்பாக கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் போன்ற கிராமங்க ளில் மீள்குடியேறியுள்ள மக்கள் போக்குவரத்து வசதியில்லாது கால்நடையாகவே தமது போக்கு வரத்தை மேற்கொள்கின்றனர்.

அத்துடன் சுகாதார வசதியில்லாது மிகத் தொலைவிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் உள்ளாகின்றனர். அத்துடன் மீள்கு டியேறிய கிராமங்களை அண்டி காடுகள் அதிகம் வளர்ந்துள்ளதால் காட்டு மிருகங்களான யானைகளின் தொல்லை மற்றும் பாம்பு, பன்றிகளின் தொல்லைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியாது. தினமும் அச்சத்துடனேயே வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளதாக தமது மனத்துயரத்தை மேற்குறித்த கிராமங்களில் மீள்குடியேறியுள்ள மக்கள் ஈழநாதம் எங்கள்குரலூடாக வெளிப்படுத்துகின்றனர்.

எனவே அம்பாறை மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது அதிகாரிகளின் கடமையல்லவா? தயவு செய்து மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு அவர்களும் ஏனைய மக்களைப் போல் அடிப்படை வசதிகளைப் பெற வழிவகுத்துத் தருமாறு இம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

*சாந்தன்*
*காஞ்சிரங்குடா*

## சிந்தனைக்கு



எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும், நேசமும் தேசப் பற்றுணர்வாக பரிணாமம் பெறுகின்றன.

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
065-2226303,
batti@eezhanatham.com
23-10-2004

## ஜனாதிபதித் தேர்தல் சலசலப்பு

அரசியல் அரங்கில் அடுத்த வருடம் டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சி அறிவித்துள்ளது. தேர்தல் ஆணையாளர் தேர்தல் விதிமுறைக்கு அமைய நேர்மையாகச் செயற்பட வேண்டும்எனவும் கோரிக்கை விடுத்திருக்கின்றது. கடந்த 1994ம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா முதல் தடவையாக வெற்றியீட்டினார். 2000ம் ஆண்டு வரை பதவி வகிக்க முடியும் எனினும் 1999ம் ஆண்டு ஒரு வருடம் முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடாத்தினார். இரண்டாவது தடவையாகவும் வெற்றியீட்டினார். இதன் பிரகாரம் எதிர்வரும் 2005ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக தேர்தல் நடாத்தப்பட வேண்டும். ஆனால் தமது முதலாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் தேர்தல் நடைபெற்றதால் தனது பதவிக்காலம் 2006ம் ஆண்டுடன் தான் முடிவடைகின்றது என்றும் இந்த ஒரு வருட நீடிப்புக்கான பதவிப் பிரமானத்தை கடந்த 2000ம் ஆண்டு பிரதம நீதியரசர் முன்னிலையில் மிகவும் இரகசியமாகச் செய்து கொண்டதாகவும் ஜனாதிபதித் தரப்பு தெரிவிக்கின்றது. இந்த விவகாரம் கடந்த பல மாதங்களுக்கு முன் கிளப்பப்பட்ட போதும் ஐக்கிய தேசியக் கட்சி அதனைப் பெரிய விடயமாகக் கருதவில்லை. தற்போது 2004ம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் இரு மாதங்கள் எஞ்சியுள்ள நிலையில் எதிர்க்கட்சி இந்தப் புதிய சலசலப்பை அரசியல் அரங்கில் ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை நடாத்த களத்தில் இறங்கியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம், எரிபொருட்களுக்கான விலை அதிகரிப்பு அரச ஊழியர்களுக் கான வேதனம் அதிகரிக்கப்படாமை போன்ற விடயங்களில் ஆளும் தரப்பு மேற்கொண்ட அரசியல் அனுகு முறைகள் தென்னிலங்கை மக்களிடையே பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்வாக்கை அதிகரிக்கச் செய்துள்ளது.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் ஜனாதிபதித் தரப்புக் காட்டும் மந்தமான போக்கு ரணில் தரப்பை உற்சாகப்படுத்தியுள்ளது. இவற்றை விட முக்கியமான விடயம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஆளும் தரப்பில் வேட்பாளர் யார் என்ற சர்ச்சை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ளது. ஜனாதிபதி இருமுறை மட்டுமே பதவி வகிக்க முடியும் என்பதால் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாது சுதந்திரக் கட்சியின் தலைமையை பண்டாரநாயக்காவின் கட்சிக்குள் தக்க வைக்க விரும்பினால் தனது சகோதரர் அனுராவை தேர்தலில் களமிறக்க வேண்டும். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ச்சியான தலைமைத்துவத்தைத் தகர்த் தெறிந்து பிறிதொரு அரசியல்வாதியின் கைகளில் திணிக்க ஜனாதிபதியின் அதிருப்தியாளர் குழு முயற்சிக் கலாம் எனவும் நம்மப்படுகின்றது.


எப்படியாயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரதமரைவிட ஏனையவர்கள் அதிகமாகப் பிரகாசிக்குமா என்பது கேள்விக்குறி இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. முன்னாள் பிரதமர் என்ற வகையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற அக்கறையும் வெற்றி நிச்சயம் என்ற இலக்கில் இக் கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கான சலசலப்பை ஏற்படுத்தும்.

## தமிழர்களின் கல்வியை அழிப்பதற்காகவே சில ஊடகங்கள் தரமான நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.

-பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி-

(எம்.யுவராஜ்)

**தமிழர்களின் கல்வி வளத்தை அழிப்பதற்காகவே சில ஊடகங்கள் தரமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. இது அரசியல் வாதிகளின் சதிமுயற்சியாகும். ஆனால் இது எமது மக்களுக்குத் தெரியாது.**



இவ்வாறு நேற்று முன் தினம் தாழங்குடா கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் காலை 6.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை நல்ல நல்ல நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றார்கள் இது தமிழர் மேல் கொண்ட அக்கறை அல்ல. தமிழர்களின் கல்வி வளத்தை திட்டமிட்டு அழிப்பதற்காகவே ஆகும். இதைத் தமிழர்கள் அனைவரும் உணர வேண்டும், என்றும் இல்லாதவாறு இந்த தொலைக்காட்சிகள் எல்லாம் தரமான தமிழ் நிகழ்ச்சிகளை இடைவெளியின்றி ஒலிபரப்புச் செய்கின்றது என்றால் அதை நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

எமது மாணவர்கள் அனைவரது உணர்ச்சியும் எமது தமிழ்த் தேசியத்தை வலியுறுத்த வேண்டும். எமது தேசியத்தை உடைப்பதற்காக சில தேசவிரோதிகள் சதி முயற்சியில் ஈடுபடுகின்றார்கள் என்றார்.

## போர் வீரனின் புடைப்புச் சிற்பம் நிலத்துக்கடியில் இருந்து மீட்பு!

(நமது நிருபர்)

கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாகச் சாட்டியில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு வரும் யாழ்.பல்கலைக்கழக வரலா ற்றுத் துறையைச் சேர்ந்த தொல்லியல் கற்கை நெறி மாணவ ஆய்வுக்குழுவினர் கடந்த திங்களன்று மிகத் தொன்மைவாய்ந்த போர்வீரர்களை சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்களை நிலத்துக்கடியில் உள்ள பாறைக்குள் கண்டு பிடித்துள்ளனர்.

இக்கண்டுபிடிப்பு இலங்கைத் தமிழரின் தொன்மை பற்றிய வரலாற்று ஆய்வில் ஒரு திருப்புமுனை என்று இவ்வாய்வை வழிநடத் திவரும் கலாநிதி பு'பரட்ணம் கூறினார்.

இதனை அகநானூறு நெடுநிலை நடுகல்" என வர்ணிக்கிறது. இச்சிற்பம் 2 அடி விட்டமும் 12 அடி ஆழமும் கொண்ட வட்ட வடிவமாக கட்டப்பட்ட ஈமச்சின் னத்தில் 9 அடி ஆழம் கொண்ட மேற்குப்பக்க பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

அதில் கிழக்குப்புறம் பார்த்த நிலையிலுள்ள பெரிய மனிதன் தனக்கு வலப்புறமாக இருக்கும் சிறிய மனிதனின் தலையை தனது வலதுகையால் பிடித்து அடக்குவது போலவும் சிறிய மனிதன் அதைத் தனது இடது கையால் தடுப்பது போலவும் வடிவ மைக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் காற்பாதங்களுக்கு அடியில் மட்பாண்டங்கள் காணப்படுவதுடன் மேலும் மூன்று அல்லது நாலு அடி ஆழத்தில் தொல் பொருள்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. அவை முழுமையாக அகழப்பட்டு ஆராயப்படும்போது இச்சிற்பம், ஈமச் சின்னம் தொடர்பான மேலும் பல உண்மைகள் வெளிவரலாம்.

## ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி நேற்று முன்தினம் சந்திப்பு

(நமது நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இந்தப் பேச்சுவார்த்தையும் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது. சிறிலங்காவின் நாடாளுமன்ற சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கோருவதற்காகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு



ஆதரவளிப்ப தில்லை என்பதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாடாக இது வரையில் இருந்து வந்தது. எனினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்களிப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளக் கூடாது என்கின்ற ஒரு கோரிக்கை ஜனாதிபதி தரப்பினால் விடுக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்து கொள்ளாவிட்டால், இயல்பாகவே சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை வெற்றி பெற்று விடும் என்பது குறிப்பிடத் தக்கது

## வாணி விழாக்கள்

(நமது நிருபர்)

சது வேப்பையடி மகா வித்தியாலயத்தில் வாணிவிழா நேற்று பாடசாலை அதிபர் சீ.பால சிங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை கல்விப்பிரிவு துணைப் பொறுப்பாளர் தாயகன் கலந்து கொண்டு நவராத்திரியின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறினார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

## தொலைக்காட்சித் தொடர்களுக்கு எதிராக விழிப்புணர்வுப் பிரசாரம்

(நமது நிருபர்)

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத் தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நவராத்திரி விழாவின் இறுதி மூன்று நாள்களும் அப்பகுதி மாணவர்கள் தொலைக் காட்சித் தொடர்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சமூகத்தைச் சீரழிக்கின்ற - மாணவர்களின் கல்வியைப் பாதிக்கின்ற தொலைக் காட்சித் தொடர்களும் சினிமாப் பாடல்களும் தற்போது புதிதுபுதிதாக வந்துகொண்டிருக்கின்றன.



சது வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாணி விழா நிகழ்வில் அதிபர் சீ.பாலசிங்கன் விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட கல்விப் பிரிவின் துணைப் பொறுப்பாளர் தாயகன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# வாகனக் கொள்வனவு தொடர்பாக இராணுவ மேஜர் உட்பட மூவர் ஆஜர்

(நமது நிருபர்)

கண்டியில் அண்மையில் வாகன கொள்ளை ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜர் உட்பட்ட மூவர் நேற்று தெல்தெனிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் இந்த மூவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வேளையில் அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அதேநேரம் பாதுகாப்பு கருதி வழக்கு விசாரணை நடைபெறும் போது பார்வையாளர்கள் அனைவரும் நீதிவானின் உத்தரவின் பேரில் வெளியேற்றப்பட்டனர்.

இதற்கிடையில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட மூவரும் நாட்டில் உள்ள 10 காவல்துறை மையங்களில் கொலை கொள்ளை மற்றும் வீடுடைப்பு போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக தேடப்பட்டவர்கள் என்ற தகவலும் நேற்று புதிதாக வெளியாகியுள்ளது.

# திருக்கோவில் பிரதேசத்தில் புதிய வீதிகள் அமைப்பு

(கணன்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் புதிய வீதிகள் அமைக்கும் வேலைத்திட்டம் நேற்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. திருக்கோவில் பிரதேச சமுர்த்திப்பிரிவிரால் சுமார் 22 கிராம சேவகர் பிரிவில் இப்புதிய வீதிகள் அமைத்தல், புனரமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே. தவராஜா, உதவி பிரதேச செயலாளர், மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராமசேவை அலுவலர்கள் திட்டமிடல் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்திற்கு கணனி இயந்திரங்கள் வேண்டும்

(எஸ்.ரவீந்திரன்)

வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்திற்கு இதுவரை கணனி இயந்திரம் வழங்கப்படவில்லை என பாடசாலை அதிபர் விசனம் தெரிவிக்கின்றார்.

இதனால் மாணவர்கள் போதிய கணனி அறிவைப்பெறமுடியாத நிலையிலுள்ளனர். நவீன உலகில் பாடசாலை மாணவர்களிடையே கணனிக்கல்வியை ஊட்ட வேண்டுமென பல்வேறுபட்ட கருத்துக்கள் ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு வரும் இவ்வேளையில் இப்பாடசாலைக்கு கணனி இயந்திரங்கள் இதுவரை வழங்கப்படாதது மாணவர்களை மிகுந்த கவலைக்குள்ளாக்கியுள்ளது.

அதிகமான ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டியங்கும் இப்பாடசாலைக்கு உடனடியாக கணனி இயந்திரங்கள் வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமெனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

**முல்லைத்தீவில்.......................**

களின் படியும் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலமும் சர்வதேச ரீதியிலும் இந்தியாவிலும் இடம் பெற்ற பல வழக்குகளை முன் உதாரணமாகக் கொண்டு மேற்படி வழக்கில் காணாமல் போனவராக கருதப்படும் மரியதாஸ் அன்டனிதாஸ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இருப்பதாக வவுனியா நீதிமன்றம் கருதுவதாகவும் இது சம்பந்தமாக இராணுவ தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியத்தில் இராணுவம் தாம் மேற்படி நபரை கைது செய்யவில்லை, முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டதன் காரணமாக இருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்திருப்பதாகவும் தெரிவிப்பதன் காரணமாக குற்றப் புலனாய்வு துறையின் விசாரணை மேற்கொண்டு மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்குமாறு வவுனியா நீதி மன்றம் மேன் முறையீட்டு நீதிமன் றுக்கு பணிப்புரை செய்வதாக மா ணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். வவுனியா நெடுங்குளம் பகுதியில் 2000ம் ஆண்டு 8ம் மாதம் 15ம் திகதி வெள்ளை வேனில் கடத்தப்பட்ட நபர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஸ்ரீலங்கா இராணுவமே காரணமென வவுனியா நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழின் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரப்புரை செய்துள்ளார்.

2000ம் ஆண்டு 8ம் மாதம் 15ம் திகதி வெள்ளை வானில் வந்தவர்களால் நெடுங்குளம் அம்பாள் தொலைத் தொடர்புமைய த்திற்கு முன்னால் அதிரடி படையின் சீருடை அணிந்தவர்களால் அரியதாஸ் விஜயகுமார் (வயது 22) கைது செய்யப்பட்டு கொண்டு சென்றதாகவும் இராணுவம் தனது மகனை கைது செய்து இருப்பதாக காணாமல் போனவரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து பின்னர் வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து இருந்தார். இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் இடம் பெற்று வந்தது. இந்த வழக்கு இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும் போது எதிரிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத போதும் வழக்காளி தரப்பில் காணாமல் போனவரின் தயார் ஆஜராகி இருந்தார்.

வவுனியா மாவட்ட நீதவான் தனது பரப்புரையினை வாசித்தார். 2000ம் ஆண்டு அவசரகால சட்டமும் பயங்கரவாத தடைசட்டமும் இருந்த காலமாகும். இந்த காலகட்டத்தில் இராணுவ தரப்பினருடன் தமிழ் இயக்கங்களும் இணைந்து செயற்பட்டகாலம் அது. மேற்படி காலத்தில் இந்த இளைஞன் வெள்ளை வானில் வந்தவர்களால் கைது செய்யப்பட்டு இருப்பதாக வழக்கு விசாரணைகள் மூலமும் சாட்சிகள் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அப்போது வன்னி 2-11 பிரிகேட்டின் கட்டளை தளபதியாக கடமையாற்றிய டொன் மனுவல்கே தீபால் அல்விஸ் 2004. 06.15 திகதி இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்கும் போது இந்த நபரை தாம் கைது செய்யவில்லை என்றும் எனினும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கைது செய்ததாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அறிக்கை மூலம் அறிந்து கொண்டதாக அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமானது அப்போது இராணுவத்தோடு இணைந்து செயற்பட்ட இயக்கமாகும். ஆயுதத்துடன் இருந்த இயக்கமும் கூட அவர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடனும் இராணுவத்தினரது அனுமதியினுடனும் தான் ஆயுதம் வைத்திருக்கமுடியும். மேற்படி இளைஞன் கைதாகி ஜோசப் முகாமில் வைத்திருந்ததை கண்டதாக சாட்சி ஒருவர் சத்திய கடதாசி மூலம் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தால் சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டு இருப்பதை அறிந்தும் அதற்கு பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தும் நடவடிக்கை எடுக்காதது கண்டனத்திற்குறியது என்றும் சாட்சியங்களின் அடிப்படையிலும் விசாரணைகளின் அடிப்படையிலும் இந்த காணாமல் போன சம்பவத்திற்கு பிரதான காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இருப்பதாகவும் இந்த வழக்கு உரிய தீர்ப்பினை வழங்குமாறு நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**மட்டு.................**

காரணங்களுக்காக மாற்றப்பட்டுள்ளார்கள்.

இரு வாரங்களுக்கு ஒரு தடைவை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இந்த கைதிகள் அங்கு மாற்றப்பட்ட பின்பு இதுவரை நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் படுத்தப்படவில்லை.

இந்த கைதிகளை குறிப்பிட்ட தவணைகளின் போது நீதிமன்றத்திற்கு அழைத்து வர பொலிஸ் மற்றும் இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பை சிறைச்சாலை நிர்வாகம் பெற வேண்டியுள்ளது.

ஆனால் பாதுகாப்பு தரப்பினரோ பல்வேறு காரணங்களைக் கூறி பாதுகாப்பு வழங்க மறுத்து வருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலை தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

இதேவேளை கடந்த ஆகஸ்ட் 26ம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் கைக் குண்டுடன் கைது செய்யப்பட்டு அன்று முதல் பொலன்னறுவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியான சுப்பிரமணியம் யோகநாதன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டியிருந்த போதிலும் நேற்றைய தினம் ஆஜர் படுத்தப்படவில்லை.

இதனையடுத்து இவரது விளக்கமறியல் எதிர்வரும் 4ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

யூலை மாதம் 30ம் திகதி வந்தாறுமூலையில் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு மொனராகலை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கருணா அணியைச் சேர்ந்த குணசேகரம் சுபேந்திரன் என்பவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டியிருந்த போதிலும் இவரும் ஆஜர் படுத்தப்படவில்லை

இவரது விளக்கமறியல் நீதிமன்றத்தினால் எதிர் வரும் 5ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சச்சு மாஸ்டர் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் கடந்த செவ்வாய்க்கிழமை தவணையின் போது ஆஜர் படுத்தப்படவில்லை. இவரது விளக்கமறியலை நீதிமன்றம் எதிர் வரும் 2ம் திகதி வரை நீடித்துள்ளது.

# ஐ.தே.கட்சி அரசு பாரிய ஊழல்களில் ஈடுபட்டு வந்ததாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பாரிய ஊழல்களில் ஈடுபட்டு வந்ததாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகராக செயற்படும் ஜேம்ஸ் ரொபட்சனுக்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வருடம் ஒன்றுக்கு 214 ஆயிரம் அமெரிக்க டொலர்களை ஊதியமாக செலுத்தியுள்ளது. அதேநேரம் ஜோன் ஏல் என்ற வெளிநாட்டவர் ஆடை தெரிவு மற்றும் பேச்சு பயிற்சி என்பவற்றுக்காக மாதம் ஒன்றுக்கு 19 ஆயிரத்து 940 அமெரிக்க மொலர்களை அன்றைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஆலோசகர்கள் தமது நாட்டில் பெறுவதை விடவும் கூடுதலான தொகையை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்று வந்ததாகவும் இவர்கள் தங்குவதற்கு ஆடம்பர மாளிகைகள் மற்றும் போக்குவரத்துக்கு சொகுசு வாகனங்கள் என்பவை அரசாங்க செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு சென்றுவருவதற்கான விமான பயண ஒழுங்குகளை அரசாங்கமே மேற்கொண்டதாகவும் வருடம் ஒன்றிற்கு இவர்கள் 7 அல்லது 8 தடவை தமது சொந்த நாடுகளுக்கு சென்று வந்துள்ளதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

**அமெரிக்கா.............**

ஜனாதிபதி தேர்தல் அடுத்தமாதம் 2ம் திகதி நடைபெறவுள்ளது.

ஆப்கானிஸ்தான், இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தினை முடித்துக் கொண்டு ரிச்சட் ஆமிரேச் ஸ்ரீலங்கா செல்லவுள்ளார்.

**கிழக்கு...................**

பத்தைந்து லெட்சம் ரூபா வீதிகள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கென செலவிடப்படவுள்ளதாகவும், எஞ்சிய தொகையினை வீதிகள் சீரமைப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தவுள்ளதாகவும் வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாணப் பொறியியலாளர் வி. நல்லரெட்ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வீதிகள் அபிவிருத்தி அரிகார சபையின் கீழ் ஆயிரத்து நூற்று நாற்பத்து மூன்று கிலோ மீற்றர் நீளமான இருபத்தைந்து வீதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**எம்.பிக்கு..........**

ள்யூ.பி.எஸ்.புஷ்பகுமார உட்பட 3 பேருக்கு எதிராக சி.ஐ.டி. யினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள கனேடிய உயர் ஸ்தானிகராலயம் செய்த முறைப்பாட்டையடுத்து சி.ஐ.டி.யினரின் விசாரணையின் பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடியில் இவரது மனைவியும் இணைப்பு செயலாளரும் சம்பந்தப்பட்டிருப்பது விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

**கிங்ஸ்லியின்...................**

யாது, இதற்கான காரணமும் தெரியாது என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

காணியின் காவலாளியான இருதயம் செபமாலை (வயது 50) சாட்சியமளிக்கையில் மாலை 5.45 மணியளவில் ஐயா 100 ரூபாவைத் தந்து சிகரட் வாங்கி வருமாறு கூறினார். அருகிலுள்ள கடைக்கு சென்று சிகரட் வாங்கிக் கொண்டிருக்கையில் வெடிச் சத்தம் கேட்டது.

அப்போது கடைக்காரர் ''ஐயாவை சுட்டுப் போட்டார்கள் போல் இருக்கின்றது'' என்று கூறினார். உடனே நான் அங்கு சென்ற போது ஐயாவின் காருக்கு அருகிலிருந்து இரண்டு பொடியன்கள் சைக்கிளில் ஏறி ஜெயந்திபுரம் பக்கமாக ஓடுவதைக் கண்டேன். அவர்களுடைய பின்பக்கம் தான் தெரிந்தமையினால் ஆட்களை அடையாளம் காணமுடியவில்லை என்றார். இந்த சாட்சியங்களை பதிவு செய்த நீதிபதி குற்றவியல் சட்டத்தின் கீழ் இந்த மரணம் ஆட்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

**சுயவிருப்பின்...............**

பொறுப்பாளர் குவேணியினால் அரசடித்தீவு மகளிர் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து கடந்த 20ம் திகதி சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பெயர் மாற்ற அறிவித்தல்

மட்டக்களப்பு, சின்ன ஊறணி, 1ம் குறுக்கில் வசிக்கும் செல்லையா ரஞ்சினி ஆகிய நான் 1978-06-18ந் திகதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிறந்தேன். பிறப்புப் பதிவில் ரெத்தினம்மா எனப் பதியப்பட்டுள்ளது. இதை இன்று 23-10-2004ந் திகதி முதல் ரஞ்சினி என்று மாற்றுகின்றேன்.இனிமேல் சகல ஆவணங்களிலும் ரஞ்சினி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,
செல்லையா - ரஞ்சினி.

1ம் குறுக்கு,
சின்னஊறணி, மட்டக்களப்பு.
2004-10-23

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 23. 10. 2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.